**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 07.09.2026**
**OS. No. 56/2020**
**வழக்கு சாட்சி PW.1– ராஜீ (எ) அண்ணாமலை, த/பெ.ஆறுமுகம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

12) என்னுடைய நிலம் என்று நான் சொல்வதற்கு கந்தாயம் செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். அந்த கந்தாய ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய சொத்தின் பட்டா எண்.1113 ஆகும். பட்டா எண்.1113 ல் கண்ட சொத்திற்கு பிரதிவாதிகள் தான் கந்தாயம் செலுத்தி வருகிறார்கள் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் கந்தாய ரசீதுகளின் அடிப்படையில் பிரதிவாதிகள் தான் செலுத்தி வருகிறார்கள் என்றால் அந்த ரசீதுகள் குறித்து எனக்கு தெரியவில்லை. 1 வது அயிட்ட சொத்தை பிரதிவாதிகள் கேட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் எப்போது என்னிடம் கேட்டார்கள் என்றால் 2020 ல் கேட்டார்கள், தேதி, மாதம் எனக்கு நினைவில்லை, அதே சமயத்தில் தான் என்னையும் மிரட்டினார்கள்.

13) இரண்டு முறை என்னை பிரதிவாதிகள் மிரட்டியதாக சொல்லியுள்ள நிலையில், எந்த வருடம் மிரட்டினார்கள் என்றால் அதே 2020 ல் தான் இரண்டு முறை மிரட்டினார்கள். அவ்வாறு மிரட்டியதாக நான் சொல்வது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா எ ன்றால் நங்கவள்ளி காவல் நிலையத்தில் கொடுத்தேன், நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். நான் புகார் கொடுத்தற்கு ஆதாரமாக நீதிமன்றத்தில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 20.06.2020 ம் தேதியில் பிரதிவாதிகள் என் நிலத்தின் பயிர்களை அழித்ததாக சொல்லும் நிலையில் இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் நங்கவள்ளி காவல் நிலையத்தில் கொடுத்தேன், நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள்.

14) 16.05.1978ம் தேதியில் என் தாயார் பச்சியம்மாள் என்பவருக்கு 58 செண்ட் நிலத்தை விற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தான் தெரியும். அதே கிரைய பத்திரத்தில் எதற்காக அந்த நிலம் விற்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஏமாற்றி நிலத்தை வாங்கி கொண்டார்கள். என் தாயார் விற்ற நிலத்தையும் சேர்த்து உண்மை காரணங்களை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் விற்ற விவரம் என் தாயார் என்னிடம் சொல்லவில்லை. என் தாயார் விற்பனை செய்த கிரைய பத்திரத்தையோ, என் தகப்பனார் பாகம் பிரித்து கொண்ட பத்திரத்தையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நகல் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் 60 வருடங்களாக அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல, நான் தான் உள்ளேன்.

15) விருதாசம்பட்டி கிராமத்தில் தான் நான் குடியுள்ளேன் என்றால் சரிதான். இருந்தபோதும், 30 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரச்சனை ஏற்பட்ட பிறகு வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் என் தாயார் உயிருடன் தான் இருந்தார் என்றும், வேண்டுமென்றே தான் அவரை சேர்க்கவில்லை என்றால் என் தாயார் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார். என் தாயாரை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எந்த பரிகாரமும் கேட்க எனக்கு உரிமையில்லாததால் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.